பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 10 2023 **SUNDAY** **12.40 PM**

<u>ஆகாஷவாணி</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வான்வெளி பாதுகாப்பில் விமானப்படை ஆற்றிவரும் பணி மகத்தானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிக்கிமில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

3. மீனவர் நலனுக்காக கடந்த ஒன்பது ஆண்டுகளில் 38 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

4. ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இரண்டாயிரமாக அதிகரித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப்போட்டிகள் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகின்றன.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

<<<<<<<>>>>>>

பாதுகாப்பு பணிகளில் மட்டுமின்றி, மனிதநேய அடிப்படையில் உதவிகளை வழங்குவதிலும் விமானப்படை முன்னணியில் உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

விமானப்படை தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வலுவான, துணிச்சலான நமது விமானப்படையைக் கண்டு நாடே பெருமிதம் கொள்வதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விமானப்படை தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைக்க வேண்டும் என்று இந்நாளில் வாழ்த்துவதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், நமது வான்வெளி பாதுகாப்பில் விமானப்படை ஆற்றிவரும் பணி மகத்தானது என்று கூறியுள்ளார்.

விமானப்படையினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இந்நாளில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உட்பட பலரும் விமானப்படை தினத்தையொட்டி வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

முப்படைகளின் தளபதி திரு அனில் சௌகான் விடுத்துள்ள செய்தியில், விமானப்படையை நவீனமயமாக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் **Prayagraj**-ல் நடைபெற்ற விமானப்படை தின கொண்டாட்டத்தில் ஏர் சீஃப் மார்ஷல் வி ஆர் சௌத்ரி பங்கேற்று, விமானப்படைக்கான புதிய கொடியினை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் விமானப்படை உள்ளதாக கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக திரு வி ஆர் சௌத்ரி தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

மழை – வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிக்கிமில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று சேதங்களின் விவரங்களை அவர்கள் முழுமையாக ஆய்வு செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த வெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 30-ஆக அதிகரித்துள்ளது.

ராணுவத்தை சேர்ந்த 9 பேரும் இதில் உயிரிழந்திருப்பதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

81 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, சிக்கிம் வெள்ள நிலைமையை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு அஜய்குமார் மிஸ்ரா கூறியுள்ளார்.

இன்று அம்மாநில முதலமைச்சர் திரு பிரேம் சிங் தமங்கை சந்தித்து பேசிய பின்னர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வும், முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்டு விவரங்களை கேட்டறிந்து வருவதாக அமைச்சர் கூறினார்.

நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு அஜய் குமார் மிஸ்ரா தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

மீனவர்களின் மேம்பாட்டிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் மேற்கொண்டுவரும் சாகர் பரிக்கிரமா என்ற கடலோர பயணத்தின் ஒரு பகுதியாக இன்று தரங்கம்பாடி மீன்பிடி துறைமுகத்தில், மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலாவுடன் இணைந்து மீனவர்களுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 48 செகண்ட்ஸ்)*

இதனைத்தொடர்ந்து, தரங்கம்பாடியில் இருந்து படகு மூலம் பூம்புகார் சென்ற அமைச்சர்கள், அப்பகுதியில் உள்ள மீனவர்களை சந்திக்கவுள்ளனர்.

**<<<<<<<>>>>>>**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் அரசுமுறைப்பயணமாக நாளை இத்தாலி புறப்பட்டு செல்கிறார்.

ரோமில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு **Guido Crosetto**-வுடன் திரு ராஜ்நாத் சிங் பேச்சு நடத்தவுள்ளார்.

பாதுகாப்புத்துறையில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர் விவாதிக்கவுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, பிரான்ஸ் செல்லும் திரு ராஜ்நாத் சிங், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடனும் பேச்சு நடத்துகிறார்.

இந்த பயணத்தின்போது பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடனும் அமைச்சர் கலந்துரையாடவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இரண்டாயிரமாக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாகவும், உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாகவும் தாலிபான் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

அஸ்ஸாமில் ஆயுதங்களை கைவிட்ட தீவிரவாதிகளுக்கான நிதியுதவியை அம்மாநில அரசு இன்று வழங்குகிறது.

இதன்படி, 182 பேருக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட உள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த ஜூலை மாதம் இவர்கள் ஆயுதங்களை கைவிட்டுவிட்டு பாதுகாப்புபடையினரிடம் சரணடைந்தனர்.

<<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் அம்மாநில அமைச்சர் திரு **Firhad Hakim**-ம் இல்லத்தில் சிபிஐ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளாட்சி அமைப்புகளின் நியமன முறைகேடு தொடர்பான வழக்கில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின், நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கையில் உள்ள காங்கேசன் துறைமுகத்திற்கு வரும் 10-ஆம் தேதிமுதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குகிறது.

இதற்கான சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றதாகவும், காலை 10 மணியளவில் நாகை துறைமுகத்திலிருந்து கப்பல் புறப்பட்டு சென்றதாகவும் எமது செய்தியாளர் செல்வன் ஜெபராஜ் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 50 நாட்களுக்கு பிறகு ரோப்கார் சேவை இன்று முதல் மீண்டும் தொடங்கியது.

பராமரிப்புப்பணிகளுக்காக இந்த சேவை நிறுத்தப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப்போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகின்றன.

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெறவுள்ள நிறைவு விழா அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக்கொடியை ஹாக்கி அணியின் கோல் கீப்பர் **PR Shreejesh** ஏந்திச் செல்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் இந்தியா 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

சர்வதேச போட்டிகளில் இந்தியா 100 பதக்கங்களை தாண்டுவது இது இரண்டாவது முறையாகும்.

இப்போட்டியில் 107 பதக்கங்களை வென்றது வரலாற்று சாதனையாகும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த சாதனையைக் கண்டு நாடே பெருமிதம் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 60 ஆண்டுகளில் இந்திய அணியின் சிறப்பான செயல்பாடு இது என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றவர்களுடன் வரும் செவ்வாய்க்கிழமை பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

----------

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் போட்டியில் இன்று ஆஸ்ரேலியாவை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி, பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

இதனையொட்டி, போட்டி நடைபெறவுள்ள சேப்பாக்கம் மைதானத்தை சுற்றி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**<<<<<<<>>>>>>**